(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(8).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 பெப்ரவரி 08 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2019 பெப்ரவரி 20, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 யூலை 11 ஆம் திகதிய 2079/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், முத்திரைத் தீர்வை தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 ஒக்டோபர் 01 ஆம் திகதிய 2091/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், முத்திரைத் தீர்வை தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிய 2104/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— (அத்தியாயமான 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 யூலை 10 ஆம் திகதிய 2079/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2),— (அத்தியாயமான 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 2092/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.3),— (அத்தியாயமான 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 நவம்பர் 15 ஆம் திகதிய 2097/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 2093/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2019 மார்ச்சு 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

11/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 10 மில்லியன் LED மின்குமிழ்களை வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்திற்கு செலவான பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட பணத் தொகையை மின் வாடிக்கையாளர்களிடமிருந்து மீளஅறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அநீதியானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை வழிப்படுத்திய நிறுவனம் யாது என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் தோல்வியடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

72/ ’18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மே மாதத்தின் ஆரம்ப காலப் பகுதியில் ஏற்பட்ட தொற்றுக் காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொற்று நோய்க்கு உள்ளாகியதாக பதிவாகியுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவர்களுக்கு மத்தியில் நோய்க்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) குறிப்பிட்ட நோய் நிலைமையின் காரணமாக மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மரணித்த சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நோய்க்கான விசேட அறிகுறிகள் யாவையென்பதையும்;

(ii) அதற்காக போதுமான மருந்துகளை வைத்தியசாலைகள் கொண்டிருந்தனவா என்பதையும்;

(iii) நோயைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிட முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

112/ ’18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாண சபையில் நடைபெற்றுள்ள மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முறைகேடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் SIN/B/AG/KI/2017/02 ஆம் இலக்க மற்றும் 2017.04.20 ஆம் திகதிய புலனாய்வு அறிக்கை ஊவா மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இவ்வறிக்கையில் ஊவா மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை புத்தகப் பைகள் வழங்கப்பட்டமை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள 4(ஆ)(i) தொடக்கம் (vii) வரையான பந்திகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) இந்த வெளிப்படுத்தல்கள் தொடர்பில் (ஆ) (i) தொடக்கம் (v) வரை மேற்கொள்ளப்பட்டுள்ள அவதானிப்புகளை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

194/ ’18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013, 2014, 2016 மற்றும் 2017 அம் ஆண்டுகளில் சனாதிபதியவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் மேற்படி விஜயங்களின் நோக்கங்கள்;

(ii) ஒவ்வொரு விஜயத்திற்காகவும் பங்கேற்ற ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பதவிகள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிட்ட பணத்தொகை;

ஒவ்வோர் ஆண்டுவாரியாகவும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

228/ ' 18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உக்குவெல பிரதேச செயலகப் பிரிவின் ரயிதலாவெலயிலிருந்து பூஜாகொட வரை செல்லும் பாதையொன்று இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து இது வரை ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இதுவரை இவ்வீதி காபட் செய்யப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இவ்வீதியை துரிதமாக காபட் செய்ய அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

252/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

327/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில வருடங்களாக பலாகல பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பதவி வெற்றிடமாக உள்ளது என்பதையும்;

(ii) கெக்கிராவ பிரதேச செயலாளர் பலாகல பிரதேச செயலகத்தின் கடமைகளையும் மேற்கொள்வதனால் பிரதேச செயலகங்கள் இரண்டினதும் மக்கள் தமது சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பிரதேச செயலாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்பி மக்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

355/ '18

கௌரவ மொஹமட் நசீர்,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "ஓய்வூதியத்துடன் கூடிய சேவைகளில் 10 வருடங்களை விட குறைந்த சேவைக் காலத்தை கொண்டுள்ள, ஆனாலும் அமைய மற்றும் தற்காலிக சேவைக்காலத்துடன் சேர்த்து 10 ஆண்டுகளை விஞ்சிய சேவைக்காலத்தை கொண்ட தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய உரித்தினை அளித்தல்" என்ற தலைப்பிலான 94/550/018 ஆம் இலக்க மற்றும் 1994.05.11 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அப்போது மூடப்பட்ட நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்குரிய லேவெல்ல இயந்திர நெசவுத் தொழிற்சாலையின் தலாத்துஓய நிலையத்தில் காய்ச்சி ஒட்டுனராக பணியாற்றிய தந்துரே, சியம்பலாகொட, கொபோஅங்க, 1/பீ ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் திரு எம்.ஜி.ஆர் சமரசிங்கவுக்கு இதுவரை ஓய்வூதிய உரித்து வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 1975.10.20 ஆம் திகதி தொடக்கம் ஏற்புடைய நிறுவனம் மூடப்பட்ட நாள் வரைக்கும் பணியாற்றியுள்ள இவருக்கு, அமைய மற்றும் தற்காலிக சேவைக்காலத்தையும் கவனத்தில் கொண்டு ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

358/' 18

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 2015 சனவரி 08 ஆம் திகதி உள்ளவாறாக மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் (JEDB) கொடுத்துத் தீர்க்க நிலுவையாக காணப்பட்ட மிகுதிப் பணத்தொகை எவ்வளவென்பதனையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும்;

(iii) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) 2015 சனவரி 08 உள்ளவாறாக மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் (JEDB) கொடுத்துத் தீர்க்க நிலுவையாகக் காணப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதனையும்;

(iv) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும்;

(v) மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் (JEDB) 2015 சனவரி 08 ஆம் திகதி உள்ளவாறான நிலுவையாக உள்ள பணிக்கொடை (Graduity) மிகுதி எவ்வளவென்பதனையும்;

(vi) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

399/ '18

கௌரவ எஸ்.சி. முத்துகுமாரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை,

(i) மகாவலி 'எச்' வலயத்திற்கு நீர்ப்பாசன நீர் கிடைக்கின்ற மகாவலியின் மேற்பக்க நீர்த்தேக்கங்களைச் சூழவுள்ள பிரதேசங்களுக்கு கிடைத்த மழைவீழ்ச்சி ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் யாது என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் பயிர்செய்யப்பட்ட வயற் காணிகளின் அளவு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் யாது என்பதையும்;

(iii) நீர்ப் பற்றாக்குறை காரணமாக பயிர்செய்ய முடியாதுபோன விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிவாரணம் வழங்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(ii) மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்து விளைச்சல் கிடைக்கும் வரை இந்த நிவாரணத் திட்டம் அமுல்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

405/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஏப்பிரல் மாதத்தில் கொஹுவல நகரில் ச.தொ.ச கிளையொன்று திறக்கப்பட்டதென்பதையும் இதில் அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேற்படி ச.தொ.ச. கிளையினால் விநியோகிக்கப்பட்ட சகல பற்றுச்சீட்டுக்களும் ஆங்கில மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(iii) இதற்கு மேலதிகமாக இக்கிளையின் கணினி அலுவல்களுக்கான ஆலோசகராக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரித்தானியர் ஒருவர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iv) இதற்கான நிபுணத்துவ அறிவுடைய இலங்கையர்கள் போதிய அளவில் உள்ளபோது, வெளிநாட்டவர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஆங்கில மொழியில் மாத்திரம் அச்சிடப்படும் பற்றுச் சீட்டுக்களை மும்மொழியிலும் அச்சிடுவதற்கும், கணினி அலுவல்களுக்காக இலங்கையர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

415/ '19

கௌரவ நிஹால் கலப்பத்தி,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுங்கத் திணைக்களத்தில் உற்பத்தி வரி பரிசோதகர் தரத்திலான பதவிகள் உருவாக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) 2000.03.27ஆம் திகதி உற்பத்தி வரிப் பிரிவுக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதம் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி (நிருவாகம்) யினால் கையொப்பமிடப் பட்டிருப்பது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி சார்பாகவா இன்றேல், உற்பத்தி வரி பணிப்பாளர் தலைமையதிபதி சார்பாகவா;

(iii) உற்பத்தி வரிச் சட்டத்தின் கீழ் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு மாத்திரம் அளிக்கப்பட்டிருந்த அதிகாரம் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதில்லையென 2016.03.23 ஆம் திகதிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் 10 ஆம் இலக்க பணிப்புரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில், இச்சட்டத்தின் கீழ் செயற்பட அதிகாரமற்ற சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சுங்கத் திணைக்களத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள பதவியொன்றுக்கான சம்பளத்தை வழுவுள்ளதாகத் தெரிவித்து கடிதம் ஒன்றை வழங்குவதற்கான அதிகாரம் இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) அதில், குறித்த பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் ரூபா 50,520/- 7x1320 - 10x1560=75,360/- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அப்போதைய நிலையில் சுற்றறிக்கை 2/97 iii இன்படி பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டமான ரூபா 85,440/- 5x2460=97,740/- இல் வருடாந்த சம்பளம் ரூபா 95,280/- என செலுத்தப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) இன்றேல், அதனைத் திருத்துவதற்கு எடுக்கப்படும் துரித நடவடிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

419/ '19

கௌரவ காமினி லொக்குகே,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்டுள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவின், பன்னிபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்தள்ள ஜின்ஸரஹேனவத்த எனும் காணி மற்றும் கொட்டாவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள குலஹேனவத்த எனும் காணியின் அளவைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி காணிகளின் ஒரு பர்சஸின் விலைமதிப்புப் பெறுமதி தனித்தனியே யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி காணிகள், வீடுகளை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு அல்லது நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி காணிகளின் ஒரு பர்சஸின் விற்பனை விலை தனித்தனியே யாது என்பதையும்;

(v) மேற்படி காணிகளை தனியார் துறைக்கு விற்பனை செய்யும் போது சந்தைப் பெறுமதி பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி காணிகளில் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளை விற்பனை செய்யும் விலைகள் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

457/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அம்மாவட்டத்தில் தற்போதுள்ள மௌலவி ஆசியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மௌலவி ஆசியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

484/ ' 19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கிளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்தக் கிளைகளின் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) 2010ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேற்படி சதொச கிளைகளில் சேவையாற்றுவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆட்சேர்ப்புக்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

(v) கண்டி மாவட்டத்தில் லங்கா சதொச கிளை வலையமைப்பை விஸ்தரிப்பதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 மார்ச்சு 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

12/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்சமயம் இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மாவட்டம் முழுவதும் டெங்கு நோய் அபாயம் நிலவுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

73/ ’18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் வரலாற்று முக்கியத்துவமிக்க ஸ்ரீ மஹாபோதியானது, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற சாம்பலினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் மூலம் ஸ்ரீ மஹாபோதிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய விசாரணை நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கை சபாபீடத்தில் வைக்கப்படுமா என்பதையும்;

(iv) தற்போது அபாயம் எதுவும் இல்லை எனினும், எதிர்காலத்தில் அபாயகரமான நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதையும்;

(v) இவ்வாறான நிலைமை ஏற்படும் பட்சடத்தில் அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அவர் குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

124/ ’18

கௌரவ சமிந்த விஜேசிறி,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் யாவை;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி நடைமுறைப் படுத்தப்படும் துறைகள் யாவை;

(iii) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு இவ்வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நன்மையடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் படி வெவ்வேறாக யாவை;

(iv) எதிர்வரும் காலத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விஸ்தரிக்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

195/ ’18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் இன்றளவில் உள்ள இலங்கைத் தூதுவராலய பிரதிநிதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்கள் மத்தியில் இலங்கைப் பிரசைகள் அல்லாத அல்லது இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்ட ஆட்கள் உள்ளனரா;

(iii) ஆமெனில், அவர்கள் பிரசாவுரிமை பெற்றுள்ள நாடுகள் மற்றும் அவர்கள் இன்றளவில் சேவையாற்றுகின்ற நாடுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

231/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவில் மாதிபொல போமேருவ என்ற பெயரில் தோட்டம் ஒன்று இருப்பதையும்;

(ii) அங்கு லயன் அறை வீடுகளில் வசிப்பவர்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) அந்த தோட்டத்தில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த குடும்பங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

253/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

328/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தில், அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள தம்புத்தேகம வைத்தியசாலையில் மருத்துவர் அடங்கலான ஏனைய பணியாட்டொகுதியில் பெருமளவிலான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) இது தொடர்பாக 2017.09.27 ஆம் திகதி புதன்கிழமை "லங்காதீப" பத்திரிகையில் "ரஜ ரட்ட சிறப்பிதழில்" ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இச்செய்தியில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளைத் திருத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

356/ '18

கௌரவ முஹம்மது நசீர்,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர் வட மாகாணத்தில் மீள்குடியேறிய சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

359/' 18

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 2015 சனவரி 08 ஆம் திகதி உள்ளவாறாக இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் (SLPC) கொடுத்துத் தீர்க்க நிலுவையாக காணப்பட்ட மிகுதிப் பணத்தொகை எவ்வளவென்பதனையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும் ;

(iii) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (ETF) 2015 சனவரி 08 உள்ளவாறாக இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் (SLPC) கொடுத்துத் தீர்க்க நிலுவையாகக் காணப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதனையும்;

(iv) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும்;

(v) இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் (SLPC) 2015 சனவரி 08 ஆம் திகதி உள்ளவாறான நிலுவையாக உள்ள பணிக்கொடை (Graduity) மிகுதி எவ்வளவென்பதனையும்;

(vi) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

406/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெல்லம்பிட்டி, அவிசாவளை வீதி, 137 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. கே.டீ. பிரேமசிறி என்பவர், வீதி அபிவிருத்திக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்ட போது தனக்கு ஏற்பட்ட அநீதி சம்பந்தமாக உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்த மேன்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படாது திருப்பி அனுப்பப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) நிகழ்ந்துள்ள ஏதேனுமொரு அநீதி சம்பந்தமாக எவரேனும் ஒருவர் மேன்முறையீடொன்றை சமர்ப்பிக்கும்போது அதனை ஏற்றுக்கொள்ளல் பொதுவானதொரு சம்பிரதாயமாக இருப்பினும், அதனை நிராகரித்து திருப்பியனுப்புதல் அரச ஊழியரொருவரினால் மேற்கொள்ளக்கூடாததொரு விடயமாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த மேன்முறையீட்டை ஏற்றுக்கொண்டு அதற்கு நியாயமான நடவடிக்கையொன்றை மேற்கொண்டு அது சம்பந்தமாக மேன்முறையீட்டாளருக்கு அறிவிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

458/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் இயங்கிவரும், புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகள், மத்திய மருந்துச்சாலைகள் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வோர் இடத்தினதும் பெயர் யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு சுகாதார நிலையத்திலும் சேவையிலீடுபட்டுள்ள மொத்த ஊழியர் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iv) மேற்படி சுகாதார நிலையங்களில் ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை;

(vi) மேற்படி சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

485/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போ மூலமாகவும் இன்றளவில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி டிப்போக்களில் இலாபமீட்டுகின்ற மற்றும் நட்டத்தில் இயங்கும் டிப்போக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் நிலவும் வெற்றிடங்கள் யாவை என்பதையும்;

(vi) நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர், இற்றைவரை டிப்போக்களில் வழங்கப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கையும் மேற்படி தொழில்களை பெற்ற ஆட்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

(vii) கண்டி மாவட்டத்தில் இ.போ.ச. டிப்போக்களின் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

509/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில் பிரதான பாடசாலைகளுக்கு இடையே வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கிரிக்கட் மற்றும் வேறு விளையாட்டுப் போட்டிகளின் போது பியர் மற்றும் மதுபானம் உற்பத்தி செய்கின்ற கம்பனிகளினால் பியர் அருந்துவதை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பாடசாலை மாணவர்களுக்கு இதனால் ஏற்படுகின்ற பாதிப்பை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

522/ '19

கௌரவ விதுர விக்ரமநாயக்க,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரண தேர்தல் தொகுதியில் பாற் பண்ணையாளர்களினால் வழங்கப்படும் பசும்பாலுக்காக மில்கோ நிறுவனத்தினால் ஒவ்வொரு மாதமும் 01 ஆந் திகதி தொடக்கம் 15 ஆந் திகதி வரையிலான நாட்களுக்காக அடுத்துவரும் 06 நாட்களுக்குள்ளும் 16 ஆந் திகதி தொடக்கம் இறுதித் திகதி வரையிலான நாட்களுக்கு அடுத்துவரும் மாதத்தின் முதல் 06 நாட்களுக்குள்ளும் பணம் செலுத்தப்பட்டதையும்;

(ii) எனினும், கடந்த சில மாதங்கள் தொடக்கம் செலுத்தல்கள் தாமதமடைந்ததுடன் 2018.05.01 தொடக்கம் 2018.05.15 ஆந் திகதிவரையிலான நாட்களுக்கு மே மாதம் 31 ஆந் திகதி வரை செலுத்தல்கள் செய்யப்படவில்லை என்பதையும்;

(iii) இந்த நிலைமை காரணமாக பாற்பண்ணையாளர்களுக்கு கறவைப் பசுக்களுக்கு தேவையான உணவுகளை வழங்குதல் கறவைப் பசுக்களை கொள்வனவு செய்வதற்காக வாங்கிய கடன்களின் தவணைப் பணத்தை செலுத்தல் மற்றும் தமது அன்றாட செலவுகளை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது என்பதையும்;

(iv) பால் உற்பத்தி குறைந்துள்ளதனால் நாட்டின் உற்பத்திகள் மீதும் தாக்கம் ஏற்பட்டதன் மூலம் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிலைமை பாற்பண்ணையாளர்களின் வாழ்க்கை மீதும் அதேபோல் உள்நாட்டு பால் உற்பத்தி செயற்பாடு பலவீனமடைவதற்கும் ஓர் பிரபல காரணியாக அமையக்கூடும் என்பதனால் முன்னரைப் போன்று முறையாக செலுத்தல்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

523/ '19

கௌரவ மயந்த திசாநாயக்க,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக உத்தேச நோக்கங்கள் எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) சமுர்த்தி பயன்களுக்காக வருடாந்தம் செலவாகின்ற தொகை யாது என்பதையும்;

(iii) தற்போது சமுர்த்தி பயன்கள் கிடைக்காத போதும் மேற்படி பயன்களை எதிர்பார்த்து இருக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் சமுர்த்தி பயனாளிகள் பக்கச்சார்பற்ற விதத்தில் தெரிவு செய்யப்பட்டதாக திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காகப் பின்பற்றப்படுகின்ற புதிய முறையியல் யாது என்பதையும்;

(iii) சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) ஆமெனில், எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை யாது என்பதையும்;

(v) சமுர்த்தி நிதியம் அண்மையில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கு அமைய கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 மார்ச்சு 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

13/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெல்மடுல்ல தேர்தல் தொகுதியில், தொம்பகஸ்வத்த என்ற பின்தங்கிய கிராமத்தில் பெரும் குடிநீர் பிரச்சினை காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

74/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 நவம்பர் மாதத்தில் ஒரு தினம் கோலாலம்பூரை நோக்கிச் செல்லவிருந்த மலேசிய வர்த்தகர் ஜயசுதீர் ஜெயராம் உட்பட மூவர் இந்த நாட்டிலிருந்து பணத்தை எடுத்துச் சென்றதன் காரணமாக இலங்கைச் சுங்கப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனரா?

(ii) அவ்வாறாயின், இவர்கள் கைதுசெய்யப்பட்டபோது இவர்களின் உடைமையிலிருந்து பணம் எவ்வளவு;

(iii) மேற்படி நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கைதுசெய்யப்பட்ட நபர்கள், சம்பந்தப்பட்ட விசாரணைகள் முடிவடையுமுன்னர் கோலாலம்பூர் நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனரா;

(ii) அவ்வாறாயின், அதற்கான அனுமதி யாரால் வழங்கப்பட்டது;

(iii) அது சம்பந்தப்பட்ட விசாரணைகள் மேற்படி நபர்கள் இன்றி முன்னெடுக்கப்பட்டுள்ளதா;

(iv) நிதி அமைச்சில் அது சம்பந்தப்பட்ட கோப்புகள் இன்றளவில் உள்ளனவா;

(v) கைப்பற்றப்பட்ட பணம் மீண்டும் குறித்த நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா;

(vi) இன்றேல், குறித்த பணம் இன்றளவில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனம் யாது;

(viii) இந்த விசாரணையில் ஈடுபட்ட சுங்கப் பிரிவு அலுவலர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

125/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "சமுர்த்தி சிப்தொர" புலமைப்பரிசில் எனும் பெயரில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் யாவை;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை "சமுர்த்தி சிப்தொர" புலமைப்பரிசில் பெற்ற பதுளை மாவட்ட மாணவ, மாணவிகளின் பெயர்கள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் படி வெவ்வேறாக யாவை;

(iv) எதிர்வரும் காலத்தில் தற்போதுள்ளதைவிட அதிக அளவிலான புலமைப் பரிசில்களை பதுளை மாவட்டத்துக்கு வழங்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

196/ '18

கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.09 முதல் 2018.06.30 வரை பிரதமர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள்;

(ii) அவ்விஜயங்களின் நோக்கங்கள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திலும் கலந்து கொண்டவர்களின் எண்ணிகையும் அவர்களது பதவிகளும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம்;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

254/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பொலன்னறுவை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

329/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக அனுராதபுரம் மாவட்டத்தின் விவசாயிகளின் பயிர்ச்செய்கைகளுக்கு, வீடுகளுக்கு மற்றும் உயிர்களுக்கு இழப்புகள் ஏற்படுவதென்பதையும்;

(ii) அதற்கான தீர்வுகளை பெற்றுத்தரும்படி வனசீவராசிகள் அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ள போதிலும், இற்றைவரை நிரந்தர தீர்வொன்று வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக தற்போது ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், குறிப்பிட்ட அலுவலர்களை விழிப்புணர்வூட்டி இம்மாவட்ட மக்களுக்கு காட்டு யானைகளால் ஏற்படுகின்ற இழப்புகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

459/ ’19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் கலைக்கப்பட்ட வடமேல் மாகாண முதலமைச்சரின் கீழ் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணசபையின் முதலமைச்சரின் கீழ் நிருவகிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா:

(v) அவ்வாறு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு மாகாணசபை பின்பற்றியுள்ள முறையியல் யாது;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

486/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி விளையாட்டு மைதானங்களின் பெயர்கள் யாவை;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி விளையாட்டு மைதானங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாது;

(v) மேற்படி விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் யாது;

(vi) கண்டி மாவட்டத்தில் ஏனைய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

512/ ’19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறையில் அமைந்துள்ள மெதொடிஸ்த ஆலயம் அமைக்கப்பட்டு எழுபது வருடங்களாகின்றது என்பதையும்;

(ii) மேற்படி வழிபாட்டுத்தலம் அமைந்துள்ள காணிக்கு இதுவரையில் சட்ட ரீதியான ஆவணம் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

(iii) 2009 ஆம் ஆண்டு முதல் தேவாலயத்திற்கான நீண்ட கால குத்தகையினைக் கோரி, தேவையான ஆவணங்களைத் தயார்செய்து காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி கோரிக்கை பற்றிய அனைத்து ஆவணங்களும் அம்பாறை பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இதற்கமைய, ஆயிரக்கணக்கான மக்களது மதக் கடமைகளை நிறைவேற்றும் இத்தேவாலயத்திற்கு நீண்டகால காணி உரிமப்பத்திரத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

524/ '19

கௌரவ மயந்த திசாநாயக்க,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் பொதுமக்களின் அவசியப்பாடுகளுக்காக அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகத்தர்களை சந்திப்பதற்காக வாரந்தோறும் திட்டவட்டமான அலுவலகத் தினமொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதா;

(ii) இந்த அலுவலக தினம் சம்பந்தமான சுற்றிக்கையொன்று வெளியிடப்பட்டிருப்பின் அது யாது;

(iii) அலுவலகத் தினமொன்று பிரகடனஞ் செய்யப்பட்டிருப்பின் அத்தினத்தில் பதவியணிக் கூட்டங்களையும் வேறு கூட்டங்களையும் நடாத்துவதால் பொதுமக்களுக்கு எதிர்நோக்க நேரிடுகின்ற சிரமங்கள் சம்பந்தமாக பரிகாரங்கள் நடைமுறையில் உள்ளனவா;

(iv) திட்டவட்டமான அலுவலகத் தினங்களில் பிரதேச மற்றும் மாவட்ட உயர் உத்தியோகத்தர்கள் கொழும்பிலுள்ள தலைமையகங்களுக்கு அழைக்கப்படுகின்றனரா;

(v) ஆமெனில் அத்தகைய தினங்களில் பொதுமக்களின் அவசியப்பாடுகளை ஈடேற்றுவதற்காக அமுலாக்கப்படுகின்ற திட்டங்கள் யாவை;

(vi) பொதுமக்களுக்காக மிகவும் பயனுறுதிமிக்க அரச சேவையொன்றினை ஈடேற்றுவதற்கான புதிய திட்டங்கள் அமுலில் உள்ளனவா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

528/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நடவடிக்கைகளுக்காக இலங்கையர் களுக்கு சனாதிபதி நிதியத்தின் மூலம் முழுமையான அல்லது பகுதியளவு புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்திற்கு அமைவாக இதற்காக தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை மற்றும் முறையியல் யாதென்பதையும்;

(iii) க.பொ.த. (உயர் தரத்தில்) அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) பட்டப்பின் படிப்பு கல்விக்காக பட்டதாரிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(v) மேற்படி (iii) மற்றும் (iv) தவிர வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை பெற்றுக்கொடுக்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(vii) 2005 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மேற்படி (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்ட முறையியல்களுக்கு புறம்பாக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு புலமைப்பரிசில்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர், நிதித் தொகை, நிறுவனம் மற்றும் வெளிநாடெனில், அந்நாட்டின் பெயர் ஆண்டுவாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

546/ ' 19

கௌரவ எஸ். சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவக வலயத்தில் எழுவைதீவில் அமைந்துள்ள பாடசாலைகள் எத்தனையென்பதையும்;

(ii) இத்தீவில் அமைந்துள்ள சரவணபவா வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயார்நிலையிலுள்ள மாணவர்கள் அப்பாடசாலையில் தவணைப் பரீட்சைக்கு தோற்றுகின்ற இறுதித் தரம் யாதென்பதையும்;

(iii) தற்பொழுது அம்மாணவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற பாடசாலை யாதென்பதையும்;

(iv) க.பொ.த. (சா/த) பரீட்சையை எழுவை தீவில் நடாத்துவதற்குள்ள தடைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

560/ '19

கௌரவ அ. அரவிந்த் குமார்,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையிலும் பணியாற்றும் பதவியணி உத்தியோகத்தர்கள் 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கடமைத் தேவைகளின் பொருட்டும் உலக வங்கி உதவி உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் கீழுள்ள கருத்திட்டங்கள் தொடர்பாகவும் வெளிநாட்டுக்குச் சென்ற சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் பெயர், பதவி, விஜயம் செய்த நாடு, விஜயத்தின் நோக்கம், விஜயத்தின் கால அளவு, விஜயத்திற்கான மொத்த செலவினம் (விமானப் பயணச்சீட்டுக் கட்டணம், வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்) மற்றும் அதற்கான நிதியத்தினை வழங்கிய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

562/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில் காணப்படும் நீர்த் தேக்கங்கள் மற்றும் குளங்களில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இன்று வரை நன்னீர் மீன்கள் விடுவிக்கப்பட்ட நீர்த் தேக்கங்களின் மற்றும் குளங்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(ii) அந்த பிரதேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக நன்னீர் மீன்பிடித் துறை கடுமையான பின்னடைவைச் சந்தித்திருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) வடமேல் மாகாண நன்னீர் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

581/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்த்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தின் 174 ஆம் முன்மொழிவின் பிரகாரம், தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேலதிக நிகழ்ச்சித்திட்டங் களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 2000 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட முறையை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்ட "மேலதிக நிகழ்ச்சித்திட்டங்கள்" யாவை என்பதையும்;

(iii) மேற்படி மேலதிக நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பொறுப்பான நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில்,

(i) சுற்றாடல் சமநிலைமை பாதுகாத்தல்;

(ii) நிலைபேறான காணி முகாமைத்துவம்;

(iii) உயிர் வளங்களின் பாதுகாப்பு;

(iv) சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல்;

(v) வன வளங்களின் பாதுகாப்பு;

ஆகியவற்றுக்கு செலவிடப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 மார்ச்சு 09, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

14/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொடக்கவெல நகர விளையாட்டு மைதானம் உரித்தாகின்ற அரச நிறுவனம் யாது என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தின் பரப்பளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானமானது பல்வேறுபட்ட விளையாட்டுப் போட்டிகளை, மாகாண / தேசிய மட்டத்தில் நடத்துவதற்குத் தேவையான இடவசதியைக் கொண்டுள்ளது என்பதையும்;

(ii) கொடக்கவெல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள்ளும் ரக்வான தேர்தல் தொகுதியினுள்ளும் அமைந்துள்ள 400 மீற்றர் ஓடு பாதையை அமைக்கக் கூடிய ஒரேயொரு விளையாட்டு மைதானம் இது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இந்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்புடைய மதிப்பீடுகள் மற்றும் திட்டத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட போதிலும், இதுவரையில் உரிய நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

75/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை,

(i) ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியின் மூலம் குடிவரவு குடியகல்வு செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விமானப் பறப்புக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) விமானக் கம்பனி ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) பெறப்பட்ட வருமானம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நட்டம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அந்த நட்டங்களுக்கான காரணங்கள் ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

126/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இன்றளவில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் கடமையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அங்கு இன்றளவில் கடமையாற்றும் அலுவலர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்குத் நியமிக்கப்பட்டதன் பின்னர், இற்றைவரை குறித்த அதிகாரசபையில் வழங்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை மற்றும் அந்த தொழில்பெறுநர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் வழங்கியுள்ள பஸ் வண்டி அனுமதிப்பத்திரங்கள் (Permits) மற்றும் அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வீதிகள் மற்றும் நபர்களின் பெயர்கள் தனித்தனியாக யாது என்பதையும்;

(vi) அதற்கென பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

238/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது மாத்தளை மாவட்டத்தில் மாடுகளின் குளம்பு நோய் பரவலாக விரிவடைந்து வருகின்றதென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இந்நிலைமையைக் கட்டுப்படுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

255/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அனுராதபுரம் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

330/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலா வாவியிலிருந்து அனுராதபுரம் திஸாவாவிக்கு தண்ணீரை வழங்குகின்ற கலா வாவி, பழைய யோதஎல கால்வாய், ஐக்கோனியா போன்ற நீர்வாழ் தாவரங்களால் மூடப்பட்டிருப்பதால் தண்ணீர் விரயமாகின்றது என்பதையும்;

(ii) பயிர்செய்கைக்காக தண்ணீர் வழங்கும் போது மேற்படி நீர்வாழ் தாவரங்களின் காரணமாக தண்ணீர் பாய்ச்சப்படுவதில் தாமதம் ஏற்படுத்துகின்றதென்பதையும்;

(iii) சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ள போதிலும் இதுவரை தீர்வொன்று கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பெரும்போகத்தில் பயிர்ச்செய்கைக்காக தண்ணீரை திறந்துவிடுவதற்கு முன் மேற்படி நீர்வாழ் தாவரங்களை அகற்றுவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

407/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைச் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாண முதலமைச்சர் அறிந்திருந்த நிலையில் அம்பலாங்கொட தம்ம குசல வித்தியாலயத்திலிருந்த சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான மிக நவீனமான கட்டிடமொன்று சட்டவிரோதமாக உடைத்து அகற்றப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சம்பவத்தை மூடி மறைப்பதற்காக அச்சந்தர்ப்பத்தில் பதிற் கடமையாற்றிய அதிபர், சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) சேவையிலிருந்து நீக்கப்பட்டமை சம்பந்தமாக பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றை நடாத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதெனினும் இற்றைவரை அவ்வாறானதொரு விசாரணை இடம்பெறவில்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறு சேவையிலிருந்து அகற்றப்பட்டமைக்கு எதிராகவும் மீண்டும் சேவையில் அமர்த்துமாறும் கோரி சம்பந்தப்பட்ட அதிபர் தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டினை ஆராய்ந்து இவரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

513/ ' 19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கஞ்சா பயிரிடுவதற்கு அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு காரணமாகவிருந்த அடிப்படை யாதென்பதையும்;

(iii) கஞ்சா ஒரு போதைப்பொருள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) கஞ்சா பாவனையின் காரணமாக உடல் மற்றும் உள சுகாதாரத்தில் சீர்கேடு ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) தற்போது கஞ்சா பயிரிடுவதற்காக சட்டரீதியாக அனுமதி கிடைத்துள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அவ்வாறு சட்டபூர்வமாக கஞ்சா பயிரிடப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

514/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் மதுவரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் புகையிலை மற்றும் சிகரட் உற்பத்தி மீது விதிக்கப்பட்ட வரியின் மூலம் ஈட்டிக்கொண்ட வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மேற்படி (i) மற்றும் (ii) இன் வருமானம் முறையே ரூபா மில்லியன்களில் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டு மோல்ட் மதுசார உற்பத்தி எத்தனை லீற்றர்கள் என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டுக்காக மதுசார உற்பத்தியை புதிதாக ஆரம்பிப்பதற்கு கம்பனிகளுக்கு புதிய உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அக்கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மதுவரிச் சட்டத்தின் கீழ் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தத்துவமுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும் அதற்கான அதிகார தத்துவம் யாருக்கு உள்ளதென்பதையும்;

(ii) கைப்பற்றப்படுகின்ற சட்டவிரோதமான மதுபானம் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு யாருக்கு அதிகார தத்துவம் உள்ளதென்பதையும்;

(iii) அவர்களின் கடமைப்பொறுப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

525/ ' 19

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டும் மொத்த வயல் காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) அவற்றில் தற்போது நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள கைவிடப்பட்டுள்ள வயல் காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(iv) அக்காணிகளில் பயிர் செய்கைக்கான துரித திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(v) நெற் செய்கைக்குத் தேவையான விதை மற்றும் உரம் உரிய முறையில் தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) நெல் கொள்வனவுக்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நெற் செய்கைக்காக இளம் சந்ததியினர் முன்வராமையினால் நிலவுகின்ற தொழிற்படை பற்றாக்குறை தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நெற் செய்கைக்கு தேவைப்படும் இயந்திர சாதனங்கள் வசதியாக சலுகை விலைக்கு பெற்றுத்தர திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இளம் சந்ததியினரை கமத்தொழிலில் ஈடுபடுத்த கவர்ச்சியான திட்டமொன்று செயற்படுத்தப்படுமெனில், அது யாதென்பதையும்;

(iv) கமத்தொழிலாளரின் பிள்ளைகளுக்கு கமத்தொழில் துறையில் வேலை வாய்ப்புகள் பெற்றுத்தர விசேட திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

529/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.04.30 ஆம் திகதி வரை சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு விஜயத்துக்காகவும் உறப்பட்ட செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) சனாதிபதியுடன் ஒவ்வொரு விஜயத்தின்போதும் பங்கேற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) சனாதிபதியுடன் வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்ற ஏனைய ஆட்களின் பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

547/ '19

கௌரவ எஸ். சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்ச் சோலை என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்கியதென்பதையும்;

(ii) ஆமெனில், அப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் இறுதியாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கும் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கும் தோற்றி பெறுபேறுகள் வெளியிடப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) தற்பொழுது இப்பாடசாலை அழைக்கப்படும் பெயர் யாதென்பதையும்;

(ii) இப்பாடசாலைக்கு யாரினால் பெயரிடப்பட்டது என்பதையும்;

(iii) அவ்வாறு பெயர் மாற்றப்பட்ட தினம் யாதென்பதையும்;

(iv) பாடசாலையின் பெயரினை மாற்றுவதன் மூலம் இப்பாடசாலையின் ஸ்தாபகர் அல்லது நிறுவுனர் என்ற அந்தஸ்த்தினை வேறு யாரும் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

563/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த சில மாதங்களில் வடமேல் மாகாணத்தில் கடுமையான வறட்சி நிலவியதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்காலப்பகுதியில் கல்கமுவ தேர்தல் தொகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வறட்சி நிவாரணம் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதியிலிருந்த உலர் உணவுப் பொருட்களின் விலைகள் சந்தை விலையை விடவும் அதிகமென்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அது தொடர்பாக ஆராய்ந்து அவசியமான நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

582/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணை 181 இற்கேற்ப தங்கம் இறக்குமதி செய்வதற்காக 50 உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய உரிமப்பத்திரங்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்களினால் செலுத்தப்பட்ட உரிமப்பத்திரக் கட்டணங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 1977 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை உலக சந்தையில் தங்கத்தின் விலையிலான போக்குகளைப் பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பைதையும்;

(iv) வரி இன்றி இலங்கைக்கு தங்கம் இறக்குமதி செய்கின்ற ஆட்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) இலங்கை தங்கம் இறக்குமதி செய்யும் பிரதான வழங்குனர்கள் மற்றும் நாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

596/ '19

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டங்களில் வாழும் ஏறத்தாழ 08 இலட்சம் மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்தில் பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்ப 2014 ஆம் ஆண்டு நிறைவுபெறும் போது அவ்வாறு அரசிற்கு பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட பெருந்தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை, வைத்தியசாலையின் பெயர் மற்றும் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட காலகட்டம் யாதென்பதையும்;

(iii) தற்போது இக்கருத்திட்டம் நடைமுறையிலில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்திற்காக அமைச்சினால் செலவிடப்பட்ட பணத்தொகை வருடாந்தம் எவ்வளவென்பதை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) பெருந்தோட்ட சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்கு இக்கருத்திட்டம் பெரும் உந்துசக்தியாக இருந்ததால் அதனை துரிதமாக மீள ஆரம்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 மார்ச்சு 11, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

15/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் ஆரம்பப் பட்டப் படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பை கற்பதற்காக இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) ஆரம்பப் பட்டப் படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பை கற்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பல்கலைக்கழம் மற்றும் பட்டப் படிப்பிற்கு ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2017 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப் பட்டமையால் கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு மேலும் கூடுதலான வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

76/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மே மாதம் இடம்பெற்ற திடீர் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட குடியிருப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒதுக்கிய தொகை எவ்வளவென்பதையும்;

(v) இழப்பீடாக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(vi) இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vii) இற்றைவரையில் இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படாத குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(viii) இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை எவ்வளவென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

127/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையினால் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை வழங்கியுள்ள உறுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) காணி உறுதிகள் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) இந்தக் காணி உறுதிகளை வழங்குவதற்கு ஊவா மாகாண சபை பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

197/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, அவுஸ்திரேலியா, யப்பான், பிரான்ஸ், சீனா, இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நியமிக்கப்பட்ட தூதுவர்கள் அல்லது உயர்ஸ்தானிகர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவர்களில் வெளிநாட்டு சேவையில் இடம்பெறும் மற்றும் வெளிநாட்டு சேவையில் இடம்பெறாத அலுவலர்கள் தனித்தனியே யாவர் என்பதையும்;

(iii) நியமனம் செய்யப்பட்ட திகதியளவில் வெளிநாட்டு சேவையில் இடம்பெறும் அலுவலர்கள் வெளிநாட்டு சேவையில் பெற்றிருந்த அனுபவம் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) நியமனம் செய்யப்பட்ட திகதியளவில் வெளிநாட்டு சேவையில் இடம்பெறாத அலுவலர்கள் கொண்டிருந்த கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

256/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மாத்தளை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii)ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

331/ ' 18

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் பேருந்து தரிப்பிடத்தில் பயணிகள் கூடங்களில் பெரும் குறைப்பாடு உள்ளதென்பதையும்;

(ii) மழைக் காலங்களில் பெருந்தொகையான பாடசாலை மாணவர்கள் மேற்படி பயணிகள் கூடங்களை பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(iii) தற்போதுள்ள பயணிகள் கூடங்கள் உரிய தரத்தில் தயாரிக்கப்படாமையினால் சீர்குலைந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அத்தியவசியமான இடங்களில் பயணிகள் கூடங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

360/ ' 18

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 2015 சனவரி 08 ஆம் திகதி உள்ளவாறாக வரையறுக்கப்பட்ட எல்கடுவ (பெருந்தோட்டக்) கம்பனியினால் கொடுத்துத் தீர்க்க நிலுவையாக காணப்பட்ட மிகுதிப் பணத்தொகை எவ்வளவென்பதனையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும் ;

(iii) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) 2015 சனவரி 08 உள்ளவாறாக வரையறுக்கப்பட்ட எல்கடுவ (பெருந்தோட்டக்) கம்பனியினால் கொடுத்துத் தீர்க்க நிலுவையாகக் காணப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதனையும்;

(iv) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும்;

(v) வரையறுக்கப்பட்ட எல்கடுவ (பெருந்தோட்டக்) கம்பனியின; 2015 சனவரி 08 ஆம் திகதி உள்ளவாறான நிலுவையாக உள்ள பணிக்கொடை (Graduity) மிகுதி எவ்வளவென்பதனையும்;

(vi) மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையிலிருந்து முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தொகை எவ்வளவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

408/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 8 வருடங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றியுள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பொலீஸ் பரிசோதகர் பதவி வழங்கப்படுவதாக விடயத்துக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அப்பதவி உயர்வுகள் இதுவரை வழங்கப்படாமையின் காரணமாக மேற்படி உத்தியோகத்தர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) எனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு அப்பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பதவி உயர்வுகள் வலுவுக்கு வரும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

460/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் புதிதாக தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை தாபிக்கும்போது கருத்திற்கொள்ளப்படும் விடயங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

487/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) கண்டி மாவட்டத்திற்கு புதிதாக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) கண்டி மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

531/ ’19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை எதிர்நோக்கிய அம்பாந்தோட்டை நகர சபை வீடுகள் வீதியின் 3/19 ஆம் இலக்கமுடைய வீட்டில் வசித்த திரு. ரீ.என். அமீர் உள்ளிட்ட 68 பேர்களின் காணிகள் 2010.03.17 ஆம் திகதி கரையோரப் பூங்காவொன்றினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக மேலே குறிப்பிட்ட குழுவினருக்கு இற்றைவரை நட்டஈடு செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த குழுவினருக்கு நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

548/ ’19

கௌரவ எஸ். சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் பூனகரி பிரதேச செயலாளர் பிரிவின் கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் என்ற பெயரில் தேசிய பாடசாலையொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற இரண்டு தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, பதவியணி பற்றாக்குறை, மேசை கதிரை தட்டுப்பாடு மற்றும் வேறு வளக் குறைபாடுகளைக் கொண்ட பாடசாலையாக கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா பணியாட்டொகுதியினரின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் நிலவுகின்ற சிற்றூழியர் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் மூலம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடியுமாவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இந்தப் பாடசாலையின் கட்டிடத் தேவைகள் பூர்த்திசெய்யப்படும் தினம் யாதென்பதையும்;

(ii) கதிரைகள் மற்றும் மேசைகளின் தட்டுப்பாட்டினைப் பூர்த்தி செய்யும் திகதி யாதென்பதையும்;

(iii) இப்பாடசாலையின் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் தினம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

561/ '19

கௌரவ அ. அரவிந்த் குமார்,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற்ற கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது பொருட்களுக்கான அனுப்பற் கட்டளை பிறப்பிப்பதற்காகவும் தரப் பரிசோதனை மேற்கொள்வதற்காகவும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட வெளிநாட்டு விஜயங்களுக்காக செலவிடப்பட்ட தொகையானது சபையின் அல்லது கருத்திட்டத்தின் செலவினத்தில் உள்ளடங்குகின்றதா என்பதையும்;

(ii) அது தொடர்பான சகல விபரங்களும் முன்வைக்கப்படுமா என்பதையும்;

(iii) அனுப்பற் கட்டளை பிறப்பிக்கப்பட்ட பொருட்களின் தரப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் இடைக்கிடை வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அவர்களது சேவைகளையும் உள்ளடக்கிப் புரியப்பட்ட போதிலும் அதன் மூலம் இடம்பெறுகின்ற பெரும் நட்டத்தினைக் குறைத்துக் கொள்வதற்காக உரிய பொருட்களின் மாதிரிகளைத் தருவித்தல் அல்லது அப்பொருட்களை இலங்கைத் துறைமுக அதிகார சபைக்குத் தருவித்து தரப் பரிசோதனை நடவடிககைகளை மேற்கொள்வதற்காக கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

(iv) இன்றேல், பொருட்களுக்கான தரப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான வேறு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

564/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் வடமேல் மாகாணத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலசீமியா நோயாளிகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டிப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அந்த நோளிகளுக்கென குருணாகல் போதனா மருத்துவ மனையின் தேசிய தலசீமியா நிலையத்தின் தலசீமியா நோய்த் தடுப்புப் பிரிவினால் பாரிய சேவை வழங்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) எவ்வாறாயினும், அந்த பிரிவுக்குத் தேவையான மனித வளம் மற்றும் வாகனங்கள் உட்பட பிற பௌதிக வளங்கள் போதியளவு கிடைக்காததை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி பிரிவுக்குத் தேவையான பௌதிக மற்றும் மனித வளத்தைப் பெற்றுக்கொடுக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

583/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 161 இன் பிரகாரம் தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக மேற்படி செய்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளுக்கு இரண்டு வருடங்களுக்கான வரி விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி முன்மொழிவுக்கிணங்க அத்தகைய வரி விடுவிப்பினைப் பெற்றுக்கொண்ட கம்பெனிகளின் பட்டியலை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி வரிவிடுவிப்பு வழங்கப்பட்டதன் மூலம் அரசாங்கம் இழந்த வரி வருமானம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 மார்ச்சு 12, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

16/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்ட மாஅதிபர் திணைக்களத்திலுள்ள அரசாங்க சட்டவாதிகளின் எண்ணிக்கை மற்றும் அரசாங்க சட்டத்தரணிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பொறுப்புக்களை தாமதமின்றி வினைத்திறனுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான அரசாங்க சட்டவாதிகள் மற்றும் அரசாங்க சட்டத்தரணிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

77/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள தேங்காய் உற்பத்தி;

(ii) மேற்படி காலப்பகுதியில் வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணிக்கை;

(iii) மேற்படி காலப்பகுதியில் வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் சீரற்ற காலநிலை காரணமாக தென்னை விளைச்சல் குறைவடைந்தமை தொடர்பில் தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) விவசாயிகளுக்கு நிவாரண உதவி அடிப்படையில் உரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், வழங்கப்பட்ட உரத்தின் அளவு மற்றும் உரம் வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இதன் கீழ் உள்ளடங்கும் தென்னை ஏக்கர்களின் அளவு யாது என்பதையும்;

(v) இதுவரை, உர நிவாரணம் வழங்கப்படவில்லை எனின், அவை வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

128/ ' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டெங்கு நோய் நாடுபூராவும் பரவியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையில் டெங்கு நோயினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவன அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்கள் உரிய வகையில் தமது பணிகளைச் செய்யத் தவறுகின்றமையால் டெங்கு நோய் பரவுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனின், டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டுவதற்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

204/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின் குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் வேறு மேலதிக நிதி ஒதுக்கங்கள் மூலம் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்படுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டு அந்த அமைச்சினால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளில் எத்தனை வீதமென்பதையும்;

(iv) மீதியாகவுள்ள நிதி ஏற்பாடுகள் எவ்வளவென்பதையும்;

(v) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளில் எத்தனை வீதமென்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல் ஏன்?

239/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "விசல் தம்புல்ல" நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் நிறைவுசெய்யப்பட்ட திகதிகள் யாவை;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iii) அதன் கீழ் வழங்கப்பட்டுள்ள நீர் இணைப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(v) நீர் வசதியீனங்களை எதிர்நோக்குகின்ற மாத்தளை மாவட்டத்தின் ஏனைய மக்களுக்கும் நீர் இணைப்புகளை வழங்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

261/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

334/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஏற்கனவே, சமுர்த்தி நிவாரணத்திற்கு தகைமை பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கிடைப்பதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது சம்பந்தமாக கவனம் செலுத்தி, சமுர்த்தி நிவாரணம் வழங்குவதிலுள்ள பிரச்சினைகளை தீர்க்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

362/ '18

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போப்பிட்டிய தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

463/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் உள்ள குளங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த குளங்களின் பெயர்கள் யாவை;

(iii) அந்த ஒவ்வொரு குளங்களுக்குரிய காணிகளில் அனுமதியில்லாமல் தங்கியிருக்கும் மற்றும் பயிர்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) இந்த குளங்களுக்குரிய காணிகளில் அனுமதியில்லாமல் தங்கியிருக்கும் மற்றும் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களை அகற்ற அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

489/ ' 19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் ஒவ்வொரு கல்விக் கோட்டத்தின் அடிப்படையில் யாவை;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மத்திய மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டிருப்பின் அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவை;

(iv) அப்பாடசாலைகளை மீளத் திறப்பதற்கோ அல்லது மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் வளங்களின் மூலம் உச்சமட்டப் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கோ அமைச்சினால் பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

515/ ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் “பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்” கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அலுவலர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்கப்படுவதாயின், அது எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரதும் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உரித்தாகின்ற கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய தகவல்கள் அடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படும் பயனுள்ள பெறுபேறுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

526/ ’19

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மலைநாட்டுப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்டுக் கிராமிய புனர்வாழ்வளிப்புத் திணைக்களம் கடந்த அரசாங்கத்தினால் ஒழிக்கப்பட்டமை காரணமாக மலைநாட்டுப் பிரதேச மக்களுக்கு அநீதி நேர்ந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மலைநாட்டுப் பிரதேசத்திற்கு உரித்தான அபிவிருத்தி நன்மைகள் யாவை;

(ii) மேற்படி அதிகாரசபைக்கு ஒதுக்கிய பணத்தொகை எவ்வளவு;

(iii) மேற்படி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவை ;

(iv) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமைத்துவம் மற்றும் தாபனப் பொறுப்பினை வகிக்கின்ற ஆட்கள் யார்;

(v) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபை மூலமாக மலைநாட்டுப் பிரதேசத்தின் வறிய கிராமங்களின் மக்களுக்கு வழங்கிய தொழில்கள் மற்றும் தொழில்களின் எண்ணிக்கை யாது;

(vi) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையினால் வறிய கிராமங்ளைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு, மற்றும் கருத்திட்டங்களின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மலைநாட்டுக் கிராமிய புனர்வாழ்வளிப்புத் திணைக்களத்தை மீண்டும் ஆரம்பிக்க கருதியுள்ளாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

532/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரியாவில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினூடாக செல்லும் ஊழியர்களிடமிருந்து ரூபா ஐந்து இலட்சம் பணத் தொகை பாதுகாப்பு வைப்பாக பெற்றுக் கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) இதன் காரணத்தினால் கொரியா நாட்டில் தொழில் வாய்ப்புகளுக்காக செல்லும் பொருளாதார கஷ்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இச்சட்டத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

550/ '19

கௌரவ சி. சிறீதரன்,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்களிலும் கிரிக்கெட் சங்கங்கள் இருபத்தைந்து உள்ளனவா என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்காக கிரிக்கெட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இதுவரை அனுமதி வழங்காமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iii) கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கமானது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவிற்காகப் பலமுறை விண்ணப்பித்த போதிலும், இதுவரை அதனைப் பதிவு செய்யாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டின் பின்னர், கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு உங்களது அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள உதவிகள் எவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

584/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டப் பிரேரணை இலக்கம் 206 இன் படி, 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தின் மூலம் அசௌகரியத்திற்கு உள்ளாக்கப்பட்ட முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முயற்சிகளின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் அசௌகரியத்துக்கு உள்ளான தொழில்முயற்சிகளுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அல்லது வசதியளிப்பதற்கு அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட செயன் முறைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வரவு செலவுத் திட்ட பிரேரணைக்கு அமைவாக, உள்நாட்டு மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அல்லது சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படும் புதிய சட்ட விதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 13, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

17/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை,

(i) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ள பெண்களின் எண்ணிக்கை;

(ii) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ள பெண்களில் தாய்மாரின் எண்ணிக்கை;

(iii) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்று பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இலங்கைக்கு மீள வருகைதந்துள்ள மற்றும் உயிரிழந்துள்ள பெண்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு வருட ரீதியாக தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பராயமடையாத பிள்ளைகள் உள்ள தாய்மார் வெளிநாடு செல்வதன் காரணமாக அவர்களின் பிள்ளைகளுக்கு பாதகமான தாக்கம் ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பராயமடையாத பிள்ளைகள் உள்ள பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதைத் தடுக்க அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

78/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 மற்றும் 2017 ஆண்டில் ஏற்பட்ட வறட்சியான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை பற்றி கணக்கெடுப்பு மேற்கொள்ளபட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வெண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) வறட்சியால் வெகுவாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவ்வறட்சியினால் தெங்கு உற்பத்திக்கு ஏற்பட்ட பாதிப்பினையும் தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக புதிய தென்னங்கன்றுகளை நடுவதற்கு இன்றுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள தென்னங்கன்றுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கன்றுகள் முழுமையாக இலவசமாக வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனின், இதற்காக அரசாங்கம் செலவிட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும் ;

(v) இன்றேல், தென்னங்கன்று ஒன்றிற்காக அறவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(vi) இற்றைவரையில் தென்னங்கன்றுகள் பெற்றுக்கொடுக்கப்படாவிடின், அவை பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

129/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i ) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

198/ ' 18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் இயங்கி வருகின்ற வெளிநாட்டு தூதுவராலய அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலகத்தையும் பராமரிக்க 2017 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ள தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2013 முதல் 2017 வரை வெளிநாட்டு தூதுவராலய அலுவலகங்களைப் பராமரிக்க செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

257/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

332/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் வாவிகளைத் தழுவியதாக நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற பெரும் தொகையான மீனவர்களுக்கு இற்றைவரை நிரந்தர வீடுகள் இல்லையென்பதை அறிவார என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீடுகள் தொடர்பான பிரச்சினையை தீர்ப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) இதற்கான வீடமைப்புக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

461/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை,

(i) வடமேல் மாகாண சபைக்கு வருமானம் கிடைக்கப்பெற்ற மூலங்கள் யாவையென்பதையும்;

(ii) வடமேல் மாகாண சபையின் வருமானம் மற்றும் செலவு ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) வடமேல் மாகாண சபையின் வருடாந்த மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினத்தின் கீழ் பணம் செலவிடப்பட்ட துறைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நல்லாட்சி அரசாங்கத்தின் சிறந்த நிதி முகாமைத்துவக் கொள்கையின் பிரகாரம் வடமேல் மாகாண சபையை வழிநடாத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

585/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 208 ஆம் இலக்க முன்மொழிவின்படி, பாதுகாப்பு முதலீட்டுக் கணக்கு முறை இரத்துச் செய்யப்பட்டதா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

(iii) மேற்படி முன்மொழிவின் மூலம் இலங்கைக்கு வெளியே தமது நிதியை வைத்திருக்கும் இலங்கையர்களுக்கு அந்நிதியை தாய் நாட்டுக்கு எடுத்துவரும் படி செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு இதுவரை கிடைத்துள்ள பிரதிபலிப்புகள் யாவை;

(iv) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் படி, வங்கிக் கணக்கு முறையினூடாக வெளிநாட்டில் வைத்திருக்கும் பணத்தை இந்நாட்டிற்கு அனுப்பும் எந்தவொரு ஆளுக்கும் எதிராக அரசாங்கத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை என திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்கு நிதி அமைச்சர் சட்ட ரீதியான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 14, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

18/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) எம்பிலிப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் உள்ள,

(i) வாட்டுக்களின் எண்ணிக்கை;

(ii) நோயாளர்களுக்கான கட்டில்களின் எண்ணிக்கை;

(iii) சத்திரசிகிச்சைக்கூடங்களின் எண்ணிக்கை;

யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரியளவிலான பிரதேசத்தை உள்ளடக்கியதாக இந்த வைத்தியசாலையினால் சேவை வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், அதற்கு உகந்தவாறு போதியளவில் வசதிகள் இல்லை என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

130/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வியலுவ தேர்தல் தொகுதியில் மீகஹகிவுல கல்விக் கோட்டத்தினுள் ப/கரந்தகஹமட வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பாடசாலையில் கல்வி பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) நிரந்தரமான விளையாட்டு மைதானம் இல்லாமை காரணமாக, அண்மையில் மேற்படி பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அருகே உள்ள வீதியொன்றில் நடாத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(iv) பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

200/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டம் மூலம் மீள்நிரப்பு மதிப்பீடுகள் மற்றும் வேறு மேலதிக நிதி ஒதுக்கங்கள் மூலம் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்படுகள் வெவ்வேறாக யாவை;

(ii) 2017 ஆம் ஆண்டு அந்த அமைச்சினால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு;

(iii) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளில் எத்தனை வீதம்;

(iv) மீதியாகவுள்ள நிதி ஏற்பாடுகள் எவ்வளவு;

(v) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளில் எத்தனை வீதம் ;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

258/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

333/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின், மகாவலி வலயத்திற்கு சொந்தமான கல்னேவ நகரம் இற்றைவரை எவ்வித அபிவிருத்தித் திட்டத்திலும் உள்ளடங்காததொரு நகரமாகும் என்பதையும்;

(ii) மிகவும் சனநெருக்கடிமிக்க நகரமாகிய இந்நகரம் தரமற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கல்னேவ நகரத்தை தரம்வாய்ந்த நகரமாக மாற்றுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

361/ '18

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தானை தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

462/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இதுவரை வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள வடமேல் மாகாணசபை அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வாறு வெளிநாடு சென்ற அலுவலர்களின் பெயர்கள் மற்றும் பதவிப்பெயர்கள் யாவை;

(iii) அவர்கள் சென்ற நாடுகள் யாவை;

(iv) அதற்காக செலவு செய்யப்பட்ட நிதித் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு அலுவலர்களைத் தெரிவு செய்கையில் வடமேல் மாகாண சபை கடைப்பிடித்த முறையியல் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

533/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உளவள மதியுரை தொடர்பில் முறைசார்ந்த பயிற்சியுடன் கூடிய 2753 ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுப்பதாக 2017 சனவரி மாதத்தில் இலத்தரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன என்பதையும்;

(ii) 2017.08.11 ஆம் திகதி காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் இதனை உறுதிப்படுத்தி கூற்றொன்றை விடுத்துள்ளார் என்பதையும்;

(iii) தற்போது மெய்யியல் மற்றும் உளவியல் கற்கின்ற பெரும் எண்ணிக்கையிலான பட்டதாரிகள் தொழில்வாய்ப்பற்று உள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஊடக அறிக்கைகளின் பிரகாரம் 2753 உளவள மதியுரை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 15, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

19/ '18

கௌரவ ஹேசா விதானகே,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் ஆரம்பம் தொடக்கம் இற்றைவரை,

(i) ஈடுபடுத்தப்பட்டுள்ள முழுமொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குத் தொகை;

(ii) பங்குகள் மீது பெறப்பட்ட வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது பெறப்பட்ட வருமானம்;

(iii) ஒட்டுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஓர் ஊழியருக்காக செலவிட்ட மொத்தப் பணத்தொகை;

(iv) மீண்டுவரும் அல்லாத செலவுகள்;

(v) வரியாக அரசாங்கத்துக்கு செலுத்திய பணத் தொகை;

(vi) இலாபம் அல்லது நட்டம்;

ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா;

(ஆ) மேற்படி தகவல்கள் தனியார்துறை வங்கி நிறுவனத்துடன் ஒப்பிடப்படுகின்ற போது எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

79/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டின் மாதாந்த நுகர்வுக்கு அவசியமான கோழி இறைச்சியின் அளவு யாது;

(ii) இந் நாட்டின் மாதாந்த கோழி இறைச்சி உற்பத்தி எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு கோழி இறைச்சி எந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது;

(ii) மாதாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற கோழி இறைச்சியின் அளவு யாது;

(iii) இலங்கையிலிருந்து கோழி இறைச்சி ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள் யாவை;

(iv) மாதாந்தம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற கோழி இறைச்சியின் அளவு யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இறைச்சி உற்பத்தி செய்கின்ற கோழிப் பண்ணைகள் அதிகமாக வியாபித்துள்ள பிரதேசங்கள் யாவை;

(ii) ஒரு கிலோ கோழி இறைச்சியின் உற்பத்திக் கிரயம் எவ்வளவு;

(iii) தற்போது சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சிக்கான மொத்த விலை எவ்வளவு;

(iv) கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் விற்பனைக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

240/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி கங்கையில் மணல் அகழ்வுக்காக வில்கமுவ பிரதேச செயலகத்தினால் அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நபர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்கள் வழங்கியமை காரணமாக வில்கமுவ பிரதேசத்தில் மகாவலி நதிக்கு பாரிய சுற்றாடல்சார் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பாதிப்பை நிறுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

259/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

488/ ' 19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வதேசப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை;

(iii) மேற்படி சர்வதேசப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்த்தல், கட்டணம் அறவிடல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

534/ ' 19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வத்தளை, கொங்கிங்தொட்ட, இலக்கம் 656/102/5 ஏ எனும் முகவரியில் வசிக்கும் திரு. சுசந்த அமரசிங்ஹ நீண்ட காலமாக மேற்கொண்ட ஆராய்ச்சிகளின்படி அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்களிலிருந்து சீமெந்துக் கற்களை உற்பத்தி செய்தல், வீதிகளுக்கு காபற் இடுதல் உட்பட 12 புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளார் என்பதையும்;

(ii) இது பற்றி அச்சு ஊடகங்களின் மூலம் பல தடவைகள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இக்கைத்தொழிலை விருத்தி செய்து, நாட்டுக்கு சேவை செய்ய திரு. அமரசிங்ஹவுக்கு உதவுமாறு உங்கள் அமைச்சினாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) எனினும், இதுவரை எந்தவோர் உதவியும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) இன்றளவில், பலதரப்பட்ட தரகர்களின் மூலம் இவரது தொழில்நுட்ப அறிவை பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வெளிநாட்டு முகவர்கள் முயன்று வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. அமரசிங்ஹவின் இக்கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்தி இவரின் உற்பத்திகளை நாட்டுக்கு அறிமுகஞ்செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

586/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 209 இன் பிரகாரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக செல்கின்ற கடல் மார்க்கத்தை வருடாந்தம் 4,500 எண்ணெய்க் கப்பல்கள் உட்பட 35,0000 கப்பல்கள் பயன்படுத்துவதாக குறிப்பிட்டு, ஆழ்கடலில் எண்ணெய் வழங்கும் பணியில் பிரவேசிப்பதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுமென முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவை நடைமுறையில் யதார்த்தமாக்க இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், மேற்படி பணிக்கான உரிமப்பத்திரம் வழங்க வெளிப்படைத் தன்மையுடன்கூடிய விலை கேட்பு முறையியலொன்று பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) அதன் பிரகாரம், ஆழ்கடலில் எண்ணெய் வழங்க உரிமப்பத்திரம் பெற்றுக்கொண்ட தரப்பினர்கள் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 மார்ச்சு 16, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

20/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலத்தினுள் இலங்கை இராணுவத்திற்கு, உணவின் பொருட்டு இறைச்சி வகைகளை வழங்கிய வழங்குநர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இராணுவத்திற்கு இறைச்சி வகைகளை வழங்கும் வழங்குநர்கள் தெரிவு செய்யப்படும் விதம் யாது என்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் ஒவ்வோர் இறைச்சி வகைக்குமென ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

(iv) அதற்கென மேலும் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(v) மேற்படி இறைச்சி வகை ஒவ்வொன்றினதும் வருடாந்த தேவைப்பாடு தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

80/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மாதாந்த நுகர்வுக்கு தேவையான முட்டைகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) உள்நாட்டு மாதாந்த முட்டை உற்பத்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு எந்தந்த நாடுகளிலிருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையிலிருந்து எந்தந்த நாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பதையும்;

(iv) மாதாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் முட்டைகளின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) முட்டைகள் உற்பத்தி செய்யப்படும் கோழிப் பண்ணைகள் அதிகளவில் வியாபித்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) முட்டையொன்றின் உற்பத்திச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) இன்றளவில் சந்தையில் முட்டையொன்றின் மொத்த விலை எவ்வளவென்பதையும்;

(iv) முட்டைகள் உற்பத்திக்கும் விற்பனைக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

132/ ’18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் “லுணுகல பேசம்வல” எனும் பெயரில் சுற்றுலாத் துறையின் கவனத்தை ஈட்டிக்கொண்டுள்ள பிரதேசமொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) மேற்படி இடமும் அவ்விடத்தைச் சுற்றி அமைந்துள்ள பிரதேசமும் பாரிய சூழல் மாசடைதலுக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இடத்தில் நடைபெறும் சுற்றாடல் மாசடைதலை குறைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

203/ ’18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டம் மூலம் மீள்நிரப்பு மதிப்பீடுகள் மற்றும் வேறு மேலதிக நிதி ஒதுக்கங்கள் மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்படுகள் வெவ்வேறாக யாவை;

(ii) 2017 ஆம் ஆண்டு அந்த அமைச்சினால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு;

(iii) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளில் எத்தனை வீதம்;

(iv) மீதியாகவுள்ள நிதி ஏற்பாடுகள் எவ்வளவு;

(v) இது ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளில் எத்தனை வீதம் ;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல் ஏன்?

260/ ’18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

535/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு வெளிச் சுற்றுவட்ட வீதியை நிர்மாணிக்கும்போது கடுவெல, ரக்கஹவத்த பிரதேசத்தில் களனி ஆற்றின் இடது மற்றும் வலது கரையோரங்களில் சுமார் 4 அடி மண் வெட்டி அகற்றப்பட்டு, கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) ஒவ்வொரு வருடத்திலும் பெரும்பாலும் வெள்ளப்பெருக்கு அபாயத்திற்கு இலக்காகின்ற ரக்கஹவத்த, ஹேவாகம ஆகிய பிரதேசங்கள் இக்காரணத்தினால் பெரும் வெள்ளப்பெருக்கு அபாயத்துக்கு இலக்காகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆற்றங்கரையோரம் வெட்டப்பட்டதன் காரணத்தினால் கடும் வெள்ளப்பெருக்கு ஆபத்துக்கு உள்ளாவதன் மூலம் பிரதேச மக்களுக்கு நேரிடுகின்ற சேதத்தைத் தடுக்கும் பொருட்டு வெட்டப்பட்ட கரையோரத்தை உரிய நிலைக்கு கொண்டுவருவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

549/ '19

கௌரவ சி. சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில், கரச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் எனும் பெயரில் தேசிய பாடசாலையொன்றுள்ளது என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகள் இரண்டில் ஒன்றாகிய இப்பாடசாலையில் ஆசியரியர் பற்றாக்குறை, பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பற்றாக்குறை, மேசை கதிரைகளின் பற்றாக்குறை மற்றும் ஏனைய வளங்களின் பற்றாக்குறையுடன் இப்பாடசாலையானது செயற்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியினரின் பெயர்கள் என்னவென்பதையும்;

(ii) இப்பாடசாலையில் நிலவும் கல்விசாரா பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்ற முடியாது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாடசாலையின் கட்டடத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

(ii) மேசை கதிரைகளின் பற்றாக்குறை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

(iii) இப்பாடசாலைப் பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

587/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 210 ஆம் பிரேரணையின் பிரகாரம் கப்பல் கட்டுதல் மற்றும் பாகங்களாக கழற்றும் கைத்தொழிலையும் மற்றும் கப்பல் திருத்துதலையும் ஊக்குவிப்பதற்கு அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் அரச காணிகளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மாவட்ட செயலாளரினால் தயாரிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கைக்கேற்ப அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள அரச காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயார்கள் என்பதையும்;

(iii) அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ள, அரசுக்குச் சொந்தமான மேற்படி காணிகளில் பயனுறுதிமிக்க வகையில் உபயோகிக்கப்பட்டுள்ள மற்றும் உபயோகிக்கப்படாத காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 210 ஆம் இலக்க பிரேரணைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளின் அளவு மற்றும் அவை யாருக்கு எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 மே 10 வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.11/' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஹஜ் யாத்திரைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,— வருடாந்தம் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற இலங்கை பக்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், அது தொடர்பான நிருவாக அமைப்பொன்றை தாபித்து சட்ட முறையான ஏற்பாடுகளை வகுக்கவும், அரசாங்கத்தால் "ஹஜ் யாத்திரைச் சட்டமொன்று" அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்தல்,— கண்டி மாவட்டத்தை புவியியல் ரீதியில் நோக்குகையில் கடல் பிரதேசத்திலிருந்து தூரமாக அமைந்திருப்பதனால் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்வதற்காக கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பைக் குறைத்தல்,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பு காரணமாக சூழலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த சூழல் பாதிப்பை குறைப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கண்டி வைத்தியசாலையை இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அனைத்தையும் அகற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் பெருவாரியாகப் பரவும் நோய்களைத் தடுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்தோடியதன் பின்னர் எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்ட பிரதேசங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனால், அத்தகைய பெருவாரியாகப் பரவும் நோய் நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்தல்,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டுக்கு திறமையைக் கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையானோர் இருப்பதனால் மேற்படி ஆட்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்லக் கூடியவகையில் கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச் சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வடமேல் மாகாணத்தில் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக மருத மர நடுகைக் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— மண்ணில் உள்ள நீரைப் பாதுகாக்கும் ஆற்றலைப்போன்றே மண்ணரிப்பினை குறைக்கும் பண்புடைய நீண்ட ஆயுட்காலத்தைக்கொண்ட மருத மரத்தை வடமேல் மாகாணத்தின் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக நடுகைசெய்யும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— பத்தலங்குண்டு தீவுவாசிகளான மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிக் குடாநாட்டுக்கு அருகில் உள்ள பிரதான தீவுகளிலொன்றான பத்தலங்குண்டு தீவைச்சேர்ந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகள் இற்றைவரை முறையான கவனத்திற்கு இலக்காகவில்லை என்பதால், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அம்மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— தற்பொழுது உலகில் நீர்வாழ் தாவரங்களுக்கு பெருங் கேள்வி நிலவுவதோடு, அதன் மூலம் எமது நாட்டுக்கு பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய பரந்துபட்ட வாய்ப்பு உருவாகியுள்ளதோடு, அண்மையில் ஜப்பான் நாட்டு நிபுணர்களால் தமது ஆராய்ச்சி அறிக்கையொன்றில் நீர்வாழ் தாவர வளர்ப்புக்கு புத்தளம் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பிரதேசம் மிகவும் உகந்ததெனச் சுட்டிகாட்டியுள்ள பின்னணியில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றைப் புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல்,— வடமேல் மாகாணத்தில் தற்போது புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் அந்த நோயாளிகளுக்காக வடமேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றைத் தாபித்தல்,— இலங்கையின் பிரதான சிறுவர் வைத்தியசாலையாகிய றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் காணப்படுகின்ற பாரிய இட நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் வட மேல், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் தாபித்தல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தினை ஒரு சுற்றுலா வலயமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதால் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை பயிற்றுவிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலையொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்பிட்டி சார்ந்த பிரதேசங்களில் பனைக் கைத்தொழிலை ஊக்குவித்தல்,— வட மேல் மாகாணத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் பனை சார்ந்த கைத்தொழில் கடந்த சில வருடங்களாக பெரும் சரிவை சந்தித்துள்ளதால், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம், எதிர்காலத்தில் கல்பிட்டி பிரதேசத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நேர் ஒத்ததாக அப்பிரதேசத்தில் பனைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற 'பற்றரி கேஜ்' முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற பற்றரி கேஜ் முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருநாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது ஊழியர் சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல்,— வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுநீரக நோய் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், சிறுநீரக நோயாளர்களுக்காக வடமேல் மாகாணத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் தலசீமியா நோயாளர்களுக்கென வைத்தியசாலையொன்றைத் தாபித்தல்,— அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிக எண்ணிக்கையான தலசீமியா நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருப்பது குருநாகல் மாவட்டத்திலாகும் என்பதுடன் இதுவரை மேற்படி நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான தனியான வைத்தியசாலையொன்றை தாபிக்கப்படாமையினால் மேற்படி நோயாளிகளுக்கு தனியான வைத்தியசாலையொன்றை குருநாகல் மாவட்டத்தில் தாபிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான விகாரைகள் காணப்படுவதும், அதிகப்படியான பிக்குமார் வசிப்பதும், கூடுதலான பௌத்தர்கள் வாழ்வதும் மற்றும் அதிகளவான சாசன பாதுகாப்பு அதிகார மன்றங்கள் நடைமுறையில் உள்ளதுமான வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா. 37/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகளையும் காணிகளையும் இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 38/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8,394 குடும்பங்கள் பாரிய நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு அலகொன்றைத் தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு மேற்படி முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/ '19

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கொலொன்னாவ மாநகரசபையை நிறுவுதல்,— கொழும்பு நகரத்தையும் அண்டிய நகரங்களையும் நிர்வகிப்பதற்காக கொழும்பு, கடுவெல மற்றும் கோட்டே எனும் மூன்று மாநகரசபைகள் நிலவியபோதிலும், இந்த மூன்று மாநகரசபை ஆளுகைப் பிரதேசங்களினதும் எல்லையில் அமைந்துள்ள கொலொன்னாவ தேர்தல் தொகுதி இரண்டு நிர்வாக அலகுகளான கொலொன்னாவ நகரசபை மற்றும் கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதால் ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இது காரணமாக அமைந்துள்ளதோடு சுற்றுப்புறத்தில் நிலவுகின்ற மாநகரசபைகள் நிர்வாகத்தின் வினைத்திறனின்பேரில் துரித அபிவிருத்தியை இன்றளவில் அடைந்துள்ளமையால், ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு கொலொன்னாவ நகரசபையையும் கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையையும் ஒருங்கிணைத்து கொலொன்னாவ மாநகரசபை நிறுவப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.